

Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
|---|
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

## பகுதி-அ - பொது தமிழ்
## Part-A- General Tamil
## 6 ஆம் வகுப்பு – தொகுதி - 3

| | |
|---|---|
| வினாக்கள் : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் : 150 |
| Questions : 1 - 100 | Total Marks : 150 |

1. அடைக்கலம் என்று வந்து அடைந்தவர் விரும்பியதனை அளிக்கும் மன்னனே! (முத்துசாமித்துரை) கேட்பாயாக! – என்று பாடிய புலவர் யார்?
   (A) மோசிகீரனார்
   (B) அழகிய சொக்கநாதப் புலவர்
   (C) இராமச்சந்திர கவிராயர்
   (D) பகுத்தறிவுக் கவிராயர்

2. சரியான கூற்றுகளைக் கண்டறிக
   I) தனிப்பாடல் திரட்டில் உள்ள பெரும்பாலான பாடல்கள் இருநூறுமுதல் முந்நூறு ஆண்டுகளுக்குள் பாடப்பட்டவை.
   II) புலவர் பலர், அவ்வபோது பாடிய பல பாடல்கள் தொகுக்கப்படாமல் இருந்தன. அவற்றைத் ‘தனிப்பாடல் திரட்டு’ என்னும் பெயரில் தொகுத்துள்ளனர்.
   III) தனிப்பாடல்களைத் தொகுத்தவர் இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி
   IV) புலவரின் வறுமையைப் பாடியவர் இராமச்சந்திரக் கவிராயர்
   (A) அனைத்தும்
   (B) II,III,IV சரி
   (C) I,II,IV சரி
   (D) II,IV மட்டும் சரி

3. மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சுரம் என்னும் மிகப் பழைமை சிவாலயத்தைப் பாடியாவர் ---------------------------
   (A) திருஞானசம்பந்தர்
   (B) சுந்தரர்
   (C) திருநாவுக்கரசர்
   (D) மாணிக்கவாசகர்

4. முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்ற ஊர் பெயர் -----------------
   (A) மயிலாப்பூர்
   (B) திருவல்லிக்கேணி
   (C) மதுரை
   (D) திருக்குருகூர்

5. “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்” என்று பாடியவர் யார்?

(A) கம்பர்

(B) பாரதியார்

(C) ஔவையார்

(D) பாரதிதாசன்

6. ‘உழவர் ஏரடிக்கும் சிறுகோலே அரசரது செங்கோலை நடத்தும் கோல்’ என்று என்று பாடியவர் யார்?

(A) ஔவையார்

(B) திருத்தக்கத்தேவர்

(C) நக்கீரர்

(D) கம்பர்

7. பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப் பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர் -------------------

(A) பட்டுக்கோட்டை கவிஞர்

(B) உடுமலை நாராயண கவி

(C) இராமச்சந்திர கவிராயர்

(D) வாணிதாசன்

8. ஆரப்பாளையம், இராசபாளையம், கணக்கம்பாளையம், குமாரபாளையம் போன்ற ஊர்கள் ---------------- மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதி ஆகும்.

(A) நாயக்க மன்னர்கள்

(B) விஜயநகர மன்னர்கள்

(C) சேர மன்னர்கள்

(D) சோழ மன்னர்கள்

9. சரியான கூற்றுகளைக் கண்டறிக
   I) நெடிய கடற்கரையை உடைய தமிழகத்தில் பரதவர் வாழ்ந்த ஊர்கள் கீழக்கரை, கோடியக்கரை, நீலாங்கரை ஆகும்.
   II) ஆட்டையாம்பட்டி, காளிப்பட்டி, கோவில்பட்டி, சிறுகூடல்பட்டி, சின்னகொல்லப்பட்டி, பெரியகொல்லப்பட்டி முதலிய நூற்றுக்கணக்கான பட்டிகள் குறிஞ்சி நிலத்தில் உள்ளன.
   III) பனைமரங்கள் நிறைந்திருந்த ஊர் பனையபுரம் ஆகும் .இது முல்லை நிலஊர் ஆகும்
   IV) நெய்தல் நிலத்தில் அமைந்த வாழ்விடங்கள், 'குப்பம்' என்னும் பெயரால் வழங்கப்பெறும்.
   (A) அனைத்தும்
   (B) II,III,IV சரி
   (C) I,III,IV சரி
   (D) II,IV மட்டும் சரி

10. பெண்ணைப் பேயெனப் பேசி அணைச்சது
    அந்தக் காலம் - வாழ்வின்
    கண்ணில் ஒன்றாய் எண்ணி நடப்பது
    இந்தக் காலம் ஆமா... இந்தக் காலம். – என்று பாடிய புலவர் யார்?
    (A) உடுமலை நாராயணகவி
    (B) பாரதியார்
    (C) இராமச்சந்திர கவிராயர்
    (D) வாணிதாசன்

11. கடம்பமரம் சூழ்ந்த பகுதி கடம்பூர், கடம்பத்தூர், தென்னை சூழ்ந்த பகுதி தெங்கூர்; புளியமரங்கள் அடர்ந்த பகுதி புளியங்குடி, புளியஞ்சோலை, புளியம்பட்டி என வழங்கும் ஊர்கள் மரப்பெயர்த் தொகுப்பு அடிப்படையில் பெயரிடப்பட்ட ஊர்களாகும் ------------நில ஊர்கள் ஆகும்
    (A) மருதம்
    (B) முல்லை
    (C) நெய்தல்
    (D) குறிஞ்சி

12. தொழில்களால் சிறப்படையும் ஊர்கள் பேட்டை எனப் பெயர் பெறும். ---------- அருகில் செவ்வாய்க்கிழமைகளில் சந்தை நடைபெறும் ஓர் ஊர், செவ்வாய்ப்பேட்டை எனப்படுகிறது.
    (A) மதுரை
    (B) சேலம்
    (C) ஆற்றூர்
    (D) திருக்குருகூர்

13. மன்னர்கள்தமிழகத்தை எழுபத்திரண்டு பாளையங்களாகப் பிரித்துத் தம் ஆளுகைக்குட்படுத்தினார்கள்

(A) சோழ மன்னர்கள்

(B) சேர மன்னர்கள்

(C) பாண்டிய மன்னர்கள்

(D) நாயக்க மன்னர்கள்

14. கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான்
குடிக்கத்தான் கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான்
கொடுத்துத்தான் இரட்சித் தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான்
நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில்தான் பண்ணி னானே – என்று பாடிய புலவர் யார்?

(A) மோசிகீரனார்

(B) ராமச்சந்திர கவிராயர்

(C) வாணிதாசன்

(D) நக்கீரர்

15. துன்பத்தையும் நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர் ---------

(A) இராமச்சந்திர கவிராயர்

(B) உடுமலை நாராயணகவி

(C) போதனார்

(D) அம்மூவனார்

16. சரியான இணைகளைக் கண்டறிக

a. குணக்கடலே! அருட்கடலே! - திருச்செந்தூர் முருகனை இவ்வாறு அழைக்கிறார்

b. ஆரைத்தான் – யாரைத்தான்

c. அல்லைத்தான் - அதுவும் அல்லாமல்

d. குமரகண்ட வலிப்பு - ஒருவகை வலிப்புநோய்

(A) a,b,c

(B) b,c,d

(C) a,c,d

(D) a,b,c,d

17. அழகிய சொக்கநாதப் புலவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ----------- என்னும் ஊரில் பிறந்தவர்.
(A) வள்ளியூர்
(B) காவல் கிணறு
(C) (C) தச்சநல்லூர்
(D) (D) திருத்து என்னும் ஊர்

18. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| a. வாடக் காண்பது | - | 1. | சூல்உளைச் சங்கு |
| b. புலம்பக் காண்பது | - | 2. | கிண்கிணிக் கொத்து |
| c. ஒடுங்கக் காண்பது | - | 3. | யோகியர் உள்ளம் |
| d. வருந்தக் காண்பது | - | 4. | மின்னார் மருங்கு |

(A) 2,3,4,1
(B) 1,3,2,4
(C) 4,2,3,1
(D) 4,3,2,1

19. வான்வழியே நினைத்த இடத்துக்குச் செல்லும் சித்தர்கள் ------------
(A) வான்கவிகள்
(B) கமனசித்தர்
(C) கானவர்கள்
(D) பதினெண் சித்தர்கள்

20. பிஞ்சு கிடக்கும் பெருமழைக்குத் தாங்காது
மிஞ்ச அதனுள் வெயில்ஒழுகும் - தஞ்சம்என்றோர்
வேட்டதுஅருள் முத்துசுவா மித்துரைரா சேந்திராகேள்!
கோட்டுமரம் பீற்றல் குடை. – இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
(A) புறநானூறு
(B) தனிப்பாடல் திரட்டு
(C) முக்கூடற்பள்ளு
(D) திருக்குற்றாலக் குறவஞ்சி

21. எந்த மன்னன் யாகத்துக்காக ஆடுகள் கொண்டு செல்லப்பட்டன?
(A) பிம்பிசாரர்
(B) இராசராசன்
(C) மகேந்திர பல்லவன்
(D) பிந்துசாரர்

22. அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது எதுவென திருவள்ளுவர் கூறுகிறார்
   (A) பொறாமை, பேராசை, சினம் கடுஞ்சொல் இவை நான்கும் இல்லாமல் வாழ்வது
   (B) வறியார்க்கு ஒன்று ஈவது
   (C) பிறருக்கு வந்த துன்பத்தை தனக்கு வந்த துன்பமாகக் கருதுதல்
   (D) தம்மிடம் இருப்பவற்றைப் பிற உயிர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் காப்பாற்றுதல்.

23. தம்மைத் தீங்கிலிருந்து காத்துக்கொள்ளும் வழிகளுள் சிறந்த வழியாகத் திருவள்ளுவர் கூறுவது யாது?
   (A) உள்ளத்தில் குற்றம் இல்லாது இருத்தல்
   (B) இல்லாதவர்க்கு ஒருபொருள் தருவது
   (C) ஆற்றல் உடையவர்களை இகழாதிருத்தல்
   (D) பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்

24. சரியான சீர்ப்படி அமைந்த திருக்குறளைக் கண்டறிக
   (A) எனைத்தானும் மனத்தானாம் எஞ்ஞான்றும் யார்க்கும் மாணாசெய் யாமை தலை.
   (B) வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து.
   (C) பகுத்துண்டு நூலோர் பல்லுயிர் ஓபுதல் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.
   (D) ஈத்துவக்கும் அறியார்கொல் இன்பம் தாமுடைமை வைத்திழக்கும் வன்கணவர்.

25. எது சிறந்த அறமெனத் திருவள்ளுவர் கூறுகிறார்?
   (A) உள்ளத்தில் குற்றம் இல்லாது இருத்தல்
   (B) துன்பம் செய்தவருக்கு நன்மை செய்வது
   (C) பிற உயிரின் துன்பத்தை தமது துன்பம் போல் கருதுதல்
   (D) பெரியவர்களுக்குத் தீங்கு செய்யாது இருத்தல்

26. அறிவின் பயன் எதுவெனத் திருவள்ளுவர் கூறுகிறார்.
   (A) நமக்குத் துன்பம் செய்தவர் நாணும்படி அவருக்கு நன்மை செய்வது.
   (B) நம் உள்ளம் ஏற்றுக்கொள்ளாத எந்த செயலையும் ஏற்றுக்கொள்ளாது இருத்தல்.
   (C) பிறஉயிரின் துன்பத்தை தமது துன்பமாகக் கருதுதல்
   (D) பிற உயிர்களுக்கு தம்மிடம் இருப்பவற்றைப் பகிர்ந்து அளித்தல்

27. மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய நூல் எது.
(A) உபபாண்டவம்
(B) தேசாந்திரி
(C) கதாவிலாசம்
(D) தாவரங்களின் உரையாடல்

28. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரப்பியில் உணவு இட்ட பெண் யார்?
(A) காயசண்டிகை
(B) தீவதிலகை
(C) ஆதிரை
(D) பரணி

29. மணிமேகலை அமுதசுரவியைக் கொண்டு உடல் குறையுற்றோர், பிணியாளர், ஆதரவு அற்றோர் ஆகியோருக்கு உணவளித்துவிட்டு எங்கு உள்ள சிறைச்சாலைக்குச் சென்று அங்கு உள்ளவர்களுக்கும் உணவிட்டாள்?
(A) பூம்புகார்
(B) இலங்கை
(C) போர்ப்புரம்
(D) மதுரை

30. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாக மாறவேண்டும் என்று கூறியவர் யார்?
(A) புத்தர்
(B) ஆபுத்திரன்
(C) தீவதிலகை
(D) மணிமேகலை

31. ‘அமுதசுரபி’ என்னும் பாத்திரம் முன்பு ஆபுத்திரன் கையில் இருந்தது எனும் செய்தியை மணிமேகலைக்குச் சொன்னவர் யார்?
(A) மாதவி
(B) தீவதிலகை
(C) காயசண்டிகை
(D) அரவணடிகள்

32. தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாடிய புலவர் ..........
(A) பாரதியார்
(B) ஔவையார்
(C) பாரதிதாசன்
(D) கவிமணி

33. ‘பசிப்பிணி போக்கிய பாவை’ யார்?
(A) மணிமேகலை
(B) ஆதிரை
(C) புத்த பீடிகை
(D) தீவதிலகை

34. தாயுமானவர் பாடிய பாடல்கள் அனைத்தும் “தாயுமானவர் பாடல்கள்” என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் எத்தனைப் பாடல்கள் உள்ளன?
(A) 1452
(B) 1450
(C) 1453
(D) 1451

35. அழுக்காறு, அவாவெகுளி, இன்னாச்சொல், நான்கும் இழுக்கா இயன்றது அறம் - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அழுக்காறு என்பதன் பொருள் யாது?
(A) பேராசை
(B) சினம்
(C) பொறாமை
(D) துன்பம்

36. ஒரு பொருளின் இயல்பை உள்ளது உள்ளபடியே அழகுடன் கூறுவது இயல்பு நவிற்சி அணி ஆகும். இவ்வணியின் மற்றொரு பெயர் ................
(A) தாயணி
(B) தன்மை நவிற்சி அணி
(C) உவமையணி
(D) சொற்பொருள் பின்வருநிலையணி

37. “குழந்தைகளை தொழிலாளர்களாக மாற்றுவது மனிதத் தன்மைக்கு எதிரான குற்றம் உலகத்தைக் குழந்தைகளின் கண்கொண்டு பாருங்கள். உலகம் அழகானது”. என்று கூறியவர்
(A) சலீம் அலி
(B) மலாலா
(C) அன்னைதெரசா
(D) கைலாஷ் சத்யார்த்தி

38. மனிதநேயத்துடன் வாழ்பவர்களால்தான் இவ்வுலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது இந்த உண்மையை, தமக்கென முயலா நோன்றாள் – பிறர்க்கென முயலுநர் உண்மையானே - இப்பாடல் வரிகள் இடம் பெற்ற சங்க நூல் எது?
   (A) புறநானூறு
   (B) நற்றிணை
   (C) ஐங்குநுறூறு
   (D) குறுந்தொகை

39. அரும்பயன் ஆயும் அறிவனார் சொல்லார் ……………………….. இக்குறட்பாவின் ஈற்றடியைத் தேர்வ செய்க.
   (A) பயனில சொல்லாமை நன்று
   (B) பண்பில்சொல் பல்லார் அகத்து
   (C) பெரும்பயன் இல்லாத சொல்
   (D) பாரித்து உரைக்கும் உரை

40. தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பது – அங்கே
   துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
   அம்மா என்குது வெள்ளைப்பசு – உடன்
   அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
   - இப்பாடலில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) இயல்பு நவிற்சி அணி
   (B) உவமையணி
   (C) உயர்வு நவிற்சி அணி
   (D) தொழிலுவமையணி

41. கைலாஷ்சத்யார்த்தி உலகக் குழந்தைகளின் கல்வி உரிமைக்காக எத்தனை நாடுகள் நடைபயணம் சென்றுள்ளார்?
   (A) 113
   (B) 105
   (C) 103
   (D) 102

42. “வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்” என்று பாடியவர் ……………
   (A) தாயுமானவர்
   (B) இராமலிங்க அடிகளார்
   (C) குன்றக்குடி அடிகளார்
   (D) திருத்தணிச்சரவணப் பெருமாள்

43. ஒரு பொருளுக்கு எந்தக் காரணமும் இல்லாமல் வைத்த பெயர் ...............
   (A) காரணப்பெயர்
   (B) பொருட்பெயர்
   (C) தொழிற்பெயர்
   (D) இடுகுறிப்பெயர்

44. கைலாஷ் சத்யார்த்திக்கு அமைதிக்கான நோபல் பரிசு யாருடன் பகிர்ந்தளிக்கப்பட்டது?
   (A) அன்னை தெரசா
   (B) மலாலா
   (C) நெல்சன் மண்டேலா
   (D) அந்தோனியோ குத்தேரசு

45. வெற்றிலை - இது ............... பெயராகும்
   (A) பொருள்
   (B) காலம்
   (C) சினை
   (D) பண்பு

46. ஆதிரை என்பது ............... பெயர் ஆகும்.
   (A) காலம்
   (B) பொருள்
   (C) சினை
   (D) தொழில்

47. வாழும் உயிரை வாங்கிடல் - இந்த
   மண்ணில் எவர்க்கும் எளிதாகும்
   வீழும் உடலை எழுப்புதலோ ஒரு
   வேந்தன் நினைக்கிலும் ஆகாதையா – எனப் பாடியவர்............
   (A) கவிமணி
   (B) வள்ளலார்
   (C) தாயுமானவர்
   (D) குணங்குடி மஸ்தான் சாகிபு

48. வெந்நீரில் குளித்தால்
மேலே கருக்குமென்று
ஆகாச கங்கை
அனல் உறைக்குமென்று ....... இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியாது?
(A) உயர்வு நவிற்சி அணி
(B) இயல்பு நவிற்சி அணி
(C) உவமையணி
(D) எடுத்துக்காட்டு உவமையணி

49. கலீல் ஜிப்ரானின் கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தது யார்?
(A) பாரதியார்
(B) தாராபாரதி
(C) புவியரசு
(D) கவிமணி

50. தாயுமானவர் திருச்சியை ஆண்ட விசயரகுநாத சொக்கலிங்கரிடம் ......... பணிபுரிந்தவர்.
(A) ஓர் அலுவலர்
(B) அமைச்சர்
(C) பெருங்கணக்கர்
(D) அரசவைப் புலவர்

51. தாராபாரதி ............ என்னும் அடைமொழி பெற்றவர்
(A) கலைஞாயிறு
(B) கவிஞாயிறு
(C) கவிக்குயில்
(D) மொழி ஞாயிறு

52. அகர வரிசைப் படுத்துக
(A) அன்பு, உயிர், ஓசை, ஐந்து, எளிமை
(B) அன்பு, உயிர், ஐந்து, எளிமை, ஓசை
(C) அன்பு, உயிர், எளிமை, ஐந்து, ஓசை
(D) அன்பு, எளிமை, உயிர், ஐந்து, ஓசை

53. காந்தி அருங்காட்சியகம் தமிழ்நாட்டில் எங்குள்ளது?
(A) கோவை
(B) காரைக்குடி
(C) மதுரை
(D) சேலம்

54. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் எப்பணியில் இருந்தவர்?
   (A) பத்திரிக்கை ஆசிரியர்
   (B) திரைப்படப் பாடலாசிரியர்
   (C) பள்ளி ஆசிரியர்
   (D) தலைமை நூலகர்

55. கைலாஷ்சத்யார்த்தி உலகக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்காக எத்தனை ஆயிரம் கி.மீ. தூரம் நடைபயணம் சென்றுள்ளார்?
   (A) 80,000
   (B) 86,000
   (C) 81,000
   (D) 83,000

56. எஸ். ராமகிருஷ்ணனின் 'பாதம்' என்னும் கதை எந்நூலில் இடம்பெற்றுள்ளது?
   (A) தாவரங்களின் உரையாடல்
   (B) கால் முளைத்த கதைகள்
   (C) கதாவிலாசம்
   (D) தேசாந்திரி

57. உணவு கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவர்கள் என்பதை உணர்ந்துள்ளேன் என்று கூறியவர் ..........
   (A) தீவதிலகை
   (B) மணிமேகலை
   (C) ஆபுத்திரன்
   (D) ஆதிரை

58. மணிமேகலையில் ஒரு பொய்கையின் மேல் அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபி பாத்திரம் தோன்றியது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இப்பொய்கையின் வேறுபெயர் ..............
   (A) கோமுகி
   (B) பஞ்சமுகி
   (C) நறுமுகை
   (D) பௌர்ணமி

59. அட்சயப் பாத்திரம் பற்றி மணிமேகலைக்குக் கூறியவர் யார்?
   (A) அறவணடிகள்
   (B) ஆதிரை
   (C) தீவதிலகை
   (D) காயசண்டிகை

60. மணிபல்லவத் தீவில் அமுதசுரபி பெற்ற வரலாற்றை மணிமேகலை யாரிடம் கூறுகிறாள்
   (A) தீவதிலகையிடம்
   (B) ஆதிரையிடம்
   (C) சித்ராபதியிடம்
   (D) அறவணடிகளிடம்

61. எல்லாரும் இன்பமாக வாழ வேண்டும் அதைத்தவிர, வேறு எதையும் நினைக்க மாட்டேன் என்று பாடியவர் ..........
   (A) தாயுமானவர்
   (B) வள்ளலார்
   (C) திருமூலர்
   (D) கடுவெளிச் சித்தர்

62. அகர வரிசைப் படுத்துக
   (A) பேருந்து, பீலி, பையன், பெண்கள், போக்குவரத்து
   (B) பீலி, பெண்கள், பேருந்து, பையன், போக்குவரத்து
   (C) பீலி, பெண்கள், பேருந்து, போக்வரத்து, பையன்
   (D) பீலி, பேருந்து, பெண்கள், பையன், போக்குவரத்து

63. வ.உ.சி சுதேசி நாவாய்ச் சங்கத்தை பதிவு செய்த நாள் ...............
   (A) 1906 அக்டோபர் 16
   (B) 1906 நவம்பர் 16
   (C) 1906 ஆகஸ்டு 15
   (D) 1906 அக்டோபர் 15

64. வேலுநாச்சியாரின் காலம் ......................
   (A) 1730 - 1786
   (B) 1730 - 1796
   (C) 1730 - 1793
   (D) 1730 – 1791

65. வேலுநாச்சியார் ஆங்கிலேயரிடமிருந்து சிவகங்கையை மீட்ட ஆண்டு .............
   (A) 1780
   (B) 1772
   (C) 1783
   (D) 1781

66. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகள் திருத்தப்பட்ட சொற்றொடரைக் கண்டறிக
(A) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
(B) அஃது ஓர் இனிய பாடல்
(C) அது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
(D) ஒரு இரவும் ஓர் பகலும் சேர்ந்தது ஒருநாள்.

67. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகள் திருத்தப்பட்ட சொற்றொடரைக் கண்டறிக
(a) அஃது இங்கே உள்ளது.
(b) அது நன்றாக உள்ளது
(c) ஓர் அழகிய சிற்றூரில் ஒரு குளம் இருந்தது.
(d) அது நகரத்திற்குச் செல்லும் சாலை.
(A) a,b,d
(B) அனைத்தும்
(C) a,b,c
(D) a,c,d

68. 'தமிழ்க்கையேடு' என்ற நூலின் ஆசிரியர் ...............
(A) உ.வே.சா
(B) கால்டுவெல்
(C) ஜி.யு. போப்
(D) பாரதியார்

69. காந்தியடிகள் தலைமையில் சென்னையில் இலக்கிய மாநாடு நடைபெற்ற ஆண்டு..........
(A) 1919
(B) 1921
(C) 1937
(D) 1935

70. வள்ளுவன் நெய்த குறள்தான்
தேசம் உடுத்திய நூலாடை – என்று பாடியவர்
(A) முடியரசன்
(B) தாராபாரதி
(C) பட்டுக்கோட்டை கவிஞர்
(D) வாணிதாசன்

71. பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் மிகுதிப்படுத்த வரும் சொல்
(A) உரிச்சொல்
(B) இடைச்சொல்
(C) திரிசொல்
(D) வடசொல்

72. ………… கூட காவிய மாக்கிக் கட்டி நிறுத்திய கலைக்கூடம் என்று பாடியவர் தாராபாரதி இப்பாடல் வரிகளில் கலைக் கூடமாகக் காட்சிதருவது எது எனப்பாடுகிறார்?
(A) சிற்பக்கூடம்
(B) ஓவியக்கூடம்
(C) பள்ளிக்கூடம்
(D) காவல்கோட்டம்

73. யாருடைய பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் என்று போற்றப்படுகிறது?
(A) கம்பர்
(B) திருவள்ளுவர்
(C) வள்ளலார்
(D) தாயுமானவர்

74. ஜான்சிராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்த பெண்மணி யார்?
(A) இராணி மங்கம்மாள்
(B) இராணி மீனாட்சி
(C) கேப்டன் லட்சுமி
(D) வேலுநாச்சியார்

75. வேலுநாச்சியாரைப் பற்றி நம் அரசியாரின் பன்மொழி அறிவு நமக்குப் பெரிய நன்மையைத் தந்திருக்கிறது என்றவர்…………….
(A) தாண்டவராயன்
(B) கோபால் நாயக்கர்
(C) பெரியமருது
(D) சின்னமருது

76. ‘கும்பி’ என்பதன் பொருள் யாது?
(A) மலை
(B) தந்தம்
(C) காடு
(D) வயிறு

77. பூதலம் - இச்சொல்லின் பொருள் யாது?
(A) பூமி
(B) நிலம்
(C) வயிறு
(D) கருணை

78. ஆங்கிலேயரிடம் முத்துவடுகநாதர் இழந்த சிவகங்கையை வேலுநாச்சியார் எத்தனை ஆண்டுகள் கழித்து மீட்டார்?
(A) ஏழு
(B) ஒன்பது
(C) எட்டு
(D) ஆறு

79. காந்தியடிகள் யாரின் அடிநிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்று விரும்பினார்?
(A) இராஜாஜி
(B) திரு.வி.க.
(C) பாரதியார்
(D) உ.வே.சா

80. ரௌலட் சட்டத்தை எதிர்ப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் யாரின் வீட்டில் நடைபெற்றது?
(A) பாரதியார் வீட்டில்
(B) இராஜாஜி வீட்டில்
(C) உ.வே.சா வீட்டில்
(D) காந்தியடிகளின்வார்தா ஆஸ்ரமத்தில்

81. விரல் நுனி வெளிச்சங்கள் என்ற நூலின் ஆசிரியர் யார்?
(A) கவிஞர் அப்துல்ரகுமான்
(B) கவிஞர் மு. மேத்தா
(C) கவிஞர் தோப்பில் முகமது மீரான்
(D) கவிஞர் தாராபாரதி

82. கன்னிக் குமரியின் கூந்தலுக்காக ............ தோட்டம் பூந்தொடுக்கும் என தாராபாரதி பாடுகிறார்
(A) காவிரிக்கரை தோட்டம்
(B) யமுனைக் கரை தோட்டம்
(C) காஷ்மீர் தோட்டம்
(D) கங்கைக் கரை தோட்டம்

83. அறத்தின் ஊன்றுகோலாக இருப்பது எதுவென தாராபாரதி பாடுகிறார்?
   (A) வள்ளுவன் நெய்த திருக்குறள்
   (B) காந்தியின் சின்னக் கைத்தடி
   (C) காளிதாசனின் தேனிசைப் பாடல்கள்
   (D) பூமியின் கிழக்கு வாசல்

84. கண்ணி என்பது .......... அடிகளால் பாடப்படும் பாடல்வகை ஆகும்.
   (A) இரண்டடி
   (B) நான்கடி
   (C) ஐந்தடி
   (D) மூன்றடி

85. அன்பர்களுக்கு தொண்டு செய்பவராக என்னை ஆக்கிவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் எனப் பாடியவர் ......
   (A) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்
   (B) வள்ளலார்
   (C) திருநாவுக்கரசர்
   (D) தாயுமானவர்

86. சரியான இணையைக் கண்டறிக
   a) நாட்டுப்பற்று – Patriotism
   b) கடற்பயணம் – Voyage
   c) பயணப் படகுகள் – Ferries
   d) பண்டம் – Commodity
   (A) அனைத்தும்
   (B) a,c,d
   (C) a,b,c
   (D) a,b,d

87. வேலுநாச்சியாரின் அமைச்சர் யார்?
   (A) கோபால் நாயக்கர்
   (B) தாண்டவராயன்
   (C) நரசப்பையன்
   (D) சின்னமருது

88. வேலுநாச்சியாரின் கணவர் முத்துவடுகநாதர் ஆங்கிலேயரால் கொல்லப்பட்ட இடம் ........
   (A) மதுரை
   (B) சிவகங்கை
   (C) காளையார்கோவில்
   (D) காட்டுமன்னார் கோவில்

89. கம்பனின் அமுதக் கவிதைகளுக்கு..........அலைகள் இசையமைக்கும் எனத் தாராபாரதி பாடுகிறார்.
(A) கங்கை அலைகள்
(B) காவிரி அலைகள்
(C) வைகை அலைகள்
(D) யமுனை அலைகள்

90. காந்தியடிகள் முதன்முறையாகச் சென்னை வந்த ஆண்டு ............
(A) 1919
(B) 1937
(C) 1910
(D) 1921

91. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர் ...............
(A) காளையார் கோவில்
(B) கானாடுகாத்தான்
(C) மதுரை
(D) தஞ்சாவூர்

92. காந்தியடிகள் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஆண்டு ...............
(A) 1937
(B) 1921
(C) 1910
(D) 1919

93. 'நீதி நூல் பயில்' என்று பாடியவர் ..............
(A) ஔவையார்
(B) நெல்லை முத்து
(C) அறிவுமதி
(D) பாரதியார்

94. செய்யுளுக்கே உரிமை பெற்றுவரும் சொல்.........
(A) உரிச்சொல்
(B) இயற்சொல்
(C) திரிசொல்
(D) இடைச்சொல்

95. தவறானதைத் கண்டறிக
(A) ஓர் இரவும் ஒரு பகலும் சேர்ந்தது ஒருநாள்.
(B) அஃது இல்லாத இடத்தில் எதுவும் நடக்காது.
(C) அது நகரத்திற்குச் செல்லும் சாலை.
(D) அது ஒரு இனிய பாடல்.

96. மருந்தைத் தேனில் கலந்து கொடுப்பது போல் கருத்துகளைச் சுவைப்படக் கூறுவது ...... ஆகும்.
(A) அசை
(B) கவிதை
(C) அணி
(D) தளை

97. சரியான இணையைக் கண்டறிக
a) தண்டருள் - தொண்டு
b) செம்மையருக்கு - சான்றோருக்கு
c) ஏவல் - பணி
d) பராபரமே - மேலான பொருளே
(A) அனைத்தும்
(B) a,d மட்டும்
(C) b,d மட்டும்
(D) c,d மட்டும்

98. வ.உ.சி சென்னைக்குச் செல்லும் போதெல்லாம் யாரை சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.
(A) இராஜாஜி
(B) பாரதியார்
(C) சுப்பிரமணிய சிவா
(D) நாமக்கல் கவிஞர்

99. தீர்க்கதரிசி என்னும் நூலின் ஆசிரியர் -----------
(A) புதுமைப்பித்தன்
(B) ஈரோடு தமிழன்பன்
(C) கு.பா.இராசகோபாலன்
(D) புவியரசு

100. அன்பினில் இன்பம் காண்போம்
அறத்தினில் நேர்மை காண்போம்
துன்புறும் உயிர்கள் கண்டால்
துரிசறு கனிவு காண்போம் – என்று பாடியவர் ------------
(A) காசி ஆனந்தன்
(B) அ.முத்தரையனார்
(C) யுமா வாசுகி
(D) அறிவுமதி

******